கவிப்பேரரசைத் தமிழ்நாடே வாழ்த்துகிறது!

# தலைவர் கலைஞர் இருந்திருந்தால் – கவிப்பேரரசை உச்சி முகர்ந்து பாராட்டியிருப்பார்!

## ‘ஞான பீடம்’ விருது பெறும் கவிப்பேரரசு வைரமுத்துவுக்கு வாழ்த்து தெரிவித்து — முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப்பதிவு!



**சென்னை, மார்ச் 16 -**

**கவிப்பேரரசு வைரமுத்து அவர்களுக்கு ஞானபீட விருது அறிவிக்கப்பட்டுள்ளதை யொட்டி அவருக்கு வாழ்த்து தெரிவித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**

தமிழைத் தன் கவித்திறத்தால் ஆளும் கவிப்பேரரசு வைரமுத்து அவர்களுக்கு ஞானபீட விருது!

காலையில்தான் கவிப்பேரரசைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தேன். சற்றுநேரத்தில் இந்த இனிய செய்தி வந்தடைந்து, அந்தச் சந்திப்பின் இனிமையை இன்னும் கூட்டியிருக் கிறது!

தமிழில் இதுவரையில் அகிலனும் ஜெயகாந்தனும் மட்டுமே பெற்றிருந்த இவ்விருது, மரபுக் கவிதைகளிலும் நவீனத்திலும் விளையாடி, தமிழ் இலக்கிய உலகில் புதுமைகள் படைத்து ஆளும் நம் கவிப்பேரரசின் கைசேர்ந்து அவரையும் நம்மையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியிருக்கிறது.

தலைவர் கலைஞர் இருந்திருந்தால் கவிப்பேரரசை உச்சிமுகர்ந்து பாராட்டியிருப்பார். அவரிடத்தில் நான் நின்று கவிப்பேரரசு வைரமுத்து அவர்களை வாழ்த்துகிறேன்!

கவிப்பேரரசைத் தமிழ்நாடே வாழ்த்துகிறது!

இவ்வாறு அப்பதிவில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# “இனி என் பயணம் புதிய பாய்ச்சலோடு தொடரும்”!

## ‘ஞான பீடம்’ விருது பெறும் – கவிப்பேரரசு வைரமுத்து நெகிழ்ச்சி!

ஞானபீட விருது இலக்கியத்துக்குப் பெரிதினும் பெரிது; தமிழுக்கு அரிதினும் அரிது.

இந்திய இலக்கியத்தின் நோபல் பரிசு என்று அறிவுலகத்தால் கருதப்படும் ஞானபீட விருது பெறுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இதுவரை தமிழ்பெற்ற இரண்டு விருதுகளும் எழுத்தாளர்களுக்கு வழங்கப்பட்டவை. இப்போதுதான் ஞானபீடம் தமிழ்க் கவிதைக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

தமிழ்க் கவிதைக்கு ஞானபீடம் இதுவரை இல்லை என்ற குறை என்னால் கழிந்தது.

என்னை வளர்த்த தமிழ்ச் சமூகத்தை நன்றியோடு நினைத்துப் பார்க்கிறேன்.

மண்ணுக்கும் மக்களுக்கும் இந்த விருதைக் காணிக்கையாக்குகிறேன்.

இந்த விருது என் வயதைக் குறைத்துவிட்டது.

இனி என் பயணம் புதிய பாய்ச்சலோடு தொடரும்.

**கவிப்பேரரசு**
**வைரமுத்து**



## நடப்பு பருவத்தில் — முன்னெப்போதும் இல்லாத வகையில் நெல் கொள்முதல் அதிகரித்துள்ளதால் - ‘கரீப்’ பருவ நெல் கொள்முதல் இலக்கினை

# 23.50 இலட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து - 47.50 இலட்சம் மெட்ரிக் டன்னாக நிர்ணயம் செய்திடுவீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் !

**சென்னை, மார்ச்.16 -**

**தமிழ்நாட்டில் நடப்பு சம்பா பருவத்தில் நெல் சாகுபடி மிகப்பெரிய உயர்வை எட்டியுள்ளது. புதிய சாதனை அளவைப் படைத்துள்ள இந்தச் சூழ்நிலையில், கரீப் பருவ கொள்முதல் அளவிற்கான இலக்கினை உயர்த்திடக் கோரி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு நேற்று முன்தினம் (14.3.2026) கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில், தமிழ்நாடு ஒரு முக்கிய நெல் உற்பத்தி மாநிலம் என்றும், 2025 2026 ஆம் ஆண்டின் கரீப் பருவத்தில் 20.50 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் நெல் பயிரிடப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்து, நடப்பாண்டில் மேட்டூர் அணை பாசனத்திற்காக உரிய நேரத்தில் திறக்கப்பட்டதுடன், சாதகமான தட்பவெப்ப நிலைகள் காரணமாக அதிக பரப்பளவில் நெல் பயிரிடப்பட்டதாலும், மேம்படுத்தப்பட்ட பயிர் மேலாண்மை முறைகள், சிறந்த பாசன கட்டமைப்பு வசதி மற்றும் விவசாயிகள் அதிக மகசூல் தரும் நெல் ரகங்களை பயிரிட்டது ஆகிய காரணிகளால், மாநிலத்தின் நெல் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனில் வரலாற்றுச் சிறப்புமிக்க நிலையை அடைந்துள்ளது என்று தெரிவித்துள்ளார். இதனை முன்னறிந்து தான் 17.11.2025 அன்று இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில், அரிசி கொள்முதல் இலக்கை 16.00 இலட்சம் மெட்ரிக் டன்களிலிருந்து (LMTs), பருவ இறுதியில் கொள்முதல் செய்யப்படும் அளவிற்கேற்ப திருத்தி அமைக்குமாறு கோரியிருந்ததையும் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.



மேலும், நடப்புப் பருவத்தில், 12.03.2026 தேதி நிலவரப்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் (TNCSC), இந்திய தேசிய கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பும் (NCCF) இணைந்து 36.63 இலட்சம் மெட்ரிக் டன் நெல்லைக் கொள்முதல் செய்துள்ளன என்றும், இது, 2024-2025 ஆம் ஆண்டு KMS பருவத்தின் இதே கால கட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்ட 24.17 இலட்சம் மெட்ரிக் டன்னோடு ஒப்பிடுகையில், நடப்பாண்டில் கொள்முதல் கணிசமாக அதிகரித்துள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளார். நடப்புப் பருவத்தில் கொள்முதல் செய்யப்பட்ட 36.63 இலட்சம் மெட்ரிக் டன் நெல்லிலிருந்து, சுமார் 24.91 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி அரவை செய்யப்படும் என தெரிவித்து, ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்பட்ட 16 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி கொள்முதல் இலக்கானது தற்போதைய கொள்முதல் அளவின்படி ஏற்கனவே அடையப்பட்டது என்பதையும் குறிப்பிட்டுள்ளார். மேலும், நெல் கொள்முதல் சராசரியாக நாளொன்றுக்கு சுமார் 50,000 மெட்ரிக் டன் என்ற விகிதத்தில் தொடர்ந்து இருந்து வருவதால் எதிர்வரும் நாட்களிலும் இதே நிலை நீடிக்கலாம் என்றும், மொத்த நெல் கொள்முதல் அளவு 47.50 இலட்சம் மெட்ரிக் டன்னை எட்டும் என்றும் சுட்டிக்காட்டி யுள்ளார்.

இதன் காரணமாக, சுமார் 32.00 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி அரவை செய்யப்பட்டு, பெறப்படும் நிலை ஏற்படும் என்றும் தனது முந்தைய கடிதத்தில் தான் ஏற்கனவே கோரியிருந்தவாறு, கொள்முதல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவும், விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் பணம் வழங்குவதை உறுதி செய்யவும், கரீப் பருவத்தில் 2025-2026 ஆண்டிற்கான தமிழ்நாட்டின் அரிசி கொள்முதல் இலக்கை முன்னுரிமை அடிப்படையில் 16.00 இலட்சம் மெட்ரிக் டன்களிலிருந்து 32.00 இலட்சம் மெட்ரிக் டன்களாகத் மாற்றியமைத்திடத் தேவையான உத்தரவுகளை வழங்குமாறு பிரதமர் அவர்களை முதலமைச்சர் அவர்கள் தமது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

### தடகளப் போட்டிகளில் பதக்கங்கள் குவித்துவரும்

# தங்கை திவ்யாவிற்கு வீட்டு மனைப்பட்டா!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!





*சென்னை, மார்ச் 16 -*

*துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-*

*கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி கீழ் பேட்டையைச் சேர்ந்த கல்லூரி மாணவி தங்கை திவ்யா.*

*கிருஷ்ணகிரியில் இன்றைய தினம் மாலை, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் நாம் பங்கேற்ற போது, கோரிக்கை மனு ஒன்றை அளித்தார்.*

*அதில், அவர் தடகள போட்டிகளில் பங்கேற்று பல்வேறு பதக்கங்களைக் குவித்து வருவதாக குறிப்பிட்டு இருந்தார்.*

*மாற்றுத்திறனாளியான அவருடைய தாயார் திருமதி.சங்கீதாவின் ஊக்குவிப்பில், விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வருவதாக கூறிய திவ்யா, அவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா வேண்டும் என்று கோரி இருந்தார்.*

*அவர் கோரிக்கை விடுத்த 2 மணி நேரத்தில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாவட்ட நிர்வாகம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட வீட்டுமனைப் பட்டாவை, அவரது தாயார் சங்கீதாவிடம் வழங்கி வாழ்த்தினோம்.*

*குரலற்றவர்களின் குரலாக திகழும் நம் திராவிட மாடல் அரசின் உடனடி நடவடிக்கைக்கு நன்றி தெரிவித்த தங்கை திவ்யா மற்றும் அவரது தாயார் சங்கீதாவின் அன்பில் நெகிழ்ந்தோம்.*

*அவர்களுக்கு என்றும் துணை நிற்போம்!*

*இவ்வாறு துணை முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.*

### இறுதிக்கட்டப் பேச்சுவார்த்தையில் சுமூக முடிவு எட்டப்பட்டதையொட்டி

# தமிழ்நாடு மின்வாரிய ஊழியர்கள் - அலுவலர்களுக்கு ஊதிய உயர்வு ஒப்பந்தம்!

## அரசு செய்தி வெளியீடு!

ென்னை, மார்ச் 16 –

தமிழ்நாடு மின்வாரிய ஊழியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு ஊதிய உயர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, போக்குவரத்து மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி 01.12.2023 முதல் தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதிய உயர்வு குறித்து ஏற்படுத்தப்பட்ட குழுவினருடன், தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் இதர சங்க நிர்வாகிகளுடன் பல கட்ட பேச்சுவார்த்தை நடத்தி இறுதியாக ஊழியர்களுக்கு, 01.12.2023–ம் நாளன்று பெறும் ஊதியத்தில் 6சதவீதம் ஊதிய உயர்வும், 01.12.2023–ம் நாளன்று, 10 வருடங்கள் பணி முடித்த ஊழியர்களுக்கு பணிப் பலனாக (Service Weightage) 01.12.2023–ம் நாளன்று பெறும் ஊதியத்தில் 3சதவீதம் ஊதிய உயர்வும் வழங்குவது என முடிவெடுக்க ப்பட்டு அறிவிக்க ப்படுகிறது. மேலும் 01.12.2023 அன்று 10 வருடங்கள் பணி முடித்த அலுவலர்களுக்கு 01.12.2023–ம் நாளன்று பெறும் ஊதியத்தில் 3சதவீதம் பணிப் பலனாக (Service Weightage) வழங்குவது எனவும் அறிவிக்கப் படு கிறது. மேலும், அலுவலர்களுக்கு ரூ.3,000/– முதல் ரூ.7,000/– வரை சிறப்புப்படி வழங்கவும் ஆணையிடப்படுகிறது.

மேற்காணும் அறிவிப்பினை தொடர்ந்து, தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் அலுவலர் சங்கம் நிர்வாகிகள் ஆகியோர் 13.03.2026–ம் அன்று தமிழ்நாடு மின்வாரிய தலைவர் முன்னிலையில் தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற இறுதி கட்ட பேச்சுவார்த்தையில் சுமூக முடிவு எட்டப்பட்டது. இவ்வூதிய உயர்வு மூலம் ஏற்படும் நிலுவைத் தொகை 01.12.2023–ம் நாள் முதல் கருத்தியலாகக் (Notional) கணக்கிட்டு, 01.12.2025–ம் நாள் முதல் பணப் பலன்கள் வழங்கவும். மேலும், இடைப்பட்ட காலத்திற்கு அதாவது 01.12.2023 முதல் 30.11.2025 வரை கருணைத் தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.500/– வீதம் கணக்கிட்டு 24 மாதங்களுக்கு வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், 01.12.2025 முதல் 28.02.2025 வரை வழங்கப்பட வேண்டிய நிலுவை தொகையினை ஒரே தவணையாக வழங்கவும் முடிவு செய்து அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வூதிய உயர்வு வாயிலாக, அனைத்து ஊழியர்களும் மற்றும் அலுவலர்களும் பயன் அடைவார்கள் என்பதனை கூடுதலாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



கரூர் மாநகராட்சியில் அமைந்துள்ள கரூர் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் ரூ.61.60 லட்சம் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன், உடற்பயிற்சி செய்வதற்கான கருவிகள் மற்றும் உபகரணங்கள் பொருத்தப்பட்ட உடற்பயிற்சிக் கூடத்தை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி திறந்து வைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். உடன் கரூர் மாவட்ட எஸ்.பி. ஜோஸ் தங்கையா எம்.எல்.ஏ., ஆர் .இளங்கோ, மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், மாமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.